# உரிய விழிப்புக் கவனம்



## பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளித்தலிலிருந்து உங்களது தொழிலைப் பாதுகாப்பதற்காக

2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடுதல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள 2018இன் பெயர் குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவனம்) விதிகளின் பிரகாரம் வாடிக்கையாளர்களுக்கான உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுமாறு பின்வரும் பெயர் குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் வேண்டப்படுகின்றன.

- சூதாட்ட வியாபாரங்கள்
- உண்மைச் சொத்து முகவர்கள்
- இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வணிகர்கள்
- சட்டத்தரணிகள், கணக்காளர்கள் மற்றும் நொத்தாரிசுகள்
- நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அல்லது கம்பனி பணிகள் வழங்குநர்கள்

2018இன் முதலாம் இலக்க பெயர் குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவனம்) விதிகளின் பிரகாரம் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக ஒவ்வொரு பெயர் குறிக்கப்பட்ட நிதியல்லா தொழிலும்

குறைந்தபட்சம் பின்வரும் தகவல்களைப் பெறுதல் வேண்டும் என்பதுடன், மூல ஆவணத்தினை வழங்குவதற்கு வாடிக்கையாளரை அல்லது பயன்பெறும் சொந்தக்காரரை தேவைப்படுத்துகின்ற கீழே (ஈ) இல் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களை சரிபார்த்தலும் சொல்லப்பட்ட ஆவணத்தினை பிரதி எடுத்தலும் வேண்டும்.

பெற்றுக் கொண்டதிலிருந்து பதிவேடுகள் 6 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்காக பேணப்பட வேண்டும்.

| | |
|---|---|
| (அ) முழுப் பெயர் | (உ) பிறந்த திகதி |
| (ஆ) நிரந்தர வதிவிட அல்லது அஞ்சல் முகவரி | (ஊ) தேசியம் |
| (இ) தொழில், தொழில்தருநரின் பெயர், வியாபாரம் அல்லது முதன்மைச் செயற்பாடுகள் | (எ) நிதி மூலம் |
| (ஈ) வாடிக்கையாளரின் அல்லது பயன்பெறு சொந்தக்காரரின் புகைப்படத்துடன் கூடிய தனிப்பட்ட அடையாள இலக்கம் அல்லது வேறு ஏதேனும் அடையாள ஆவணம் (தேசிய அடையாள அட்டை, கடவுச் சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் போன்றன). | (ஏ) கொடுக்கல்வாங்கல் நோக்கம்<br>(ஐ) தொலைபேசி இலக்கங்கள் (வதிவிடம், அலுவலகம், செல்லிடத் தொலைபேசி) |

**அத்துடன், பணம் தூயதாக்குதல், பயங்கரவாதி நிதியளித்தல் அல்லது ஏதேனும் சட்டவிரோதமான நடவடிக்கையினை புரிவதுடன் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்புபடக் கூடியதாக இருக்கலாம் என உங்களிடம் நியாயமான காரணங்கள் ஏதுமிருப்பின், அத்தகைய சந்தேகத்தினை 2017இன் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் (படிவம்) ஒழுங்கு விதிகளின் "அட்டவணை" ஊடாக நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவிப்பதற்கு நீங்கள் வேண்டப்படுகின்றீர்கள். இப்படிவத்தினை www.fiusrilanka.gov.lk இல் பெற்றுக்கொள்ளலாம்.**


பணிப்பாளர்
இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு,
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

0112477125 0112477692 fiudnfbp@cbsl.lk www.fiusrilanka.gov.lk